**தலைப்பு 296 – ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 296 - ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 மே 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய

வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | | |
| | | ரூபா | | | |
| (அ) | 1987 ஜூன் 20 திகதிய 28 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1969 இன் 01 இலக்க இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 11 ஊ | - | நியமத்துக்கு முரணாக இறக்குமதி மேற்கொள்ளும் இறக்குமதியாளர்களை வர்த்தமானி மூலம் வெளியிட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 1969 இன் 1 இலக்க இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுப் பிரமாணங்களை மீறி இறக்குமதி ஏற்றுமதி மேற்கொள்ளும் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களை கறைநிரல்படுத்துவதற்காக வர்த்தமானி வரைவு இதுவரை சட்ட வரைஞர் திணைக்களத்தினால் வரைவு தயாரிக்கப்பட்டு மும்மொழிகளிலும் இந்த | 1969 இன் 01 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் அவதானிப்புக்கள் பெற்றுக்கொள்வதற்காக வர்த்தக மற்றும் முதலீட்டு சுங்க வரித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2023.04.28 திகதி எழுத்துமூலம் அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2022 ஏப்ரல் 04 திகதிய 5/2022 இலக்கம் கொண்ட நிதியமைச்சுச் சுற்றறிக்கை | - | அரச ஆதனங்கள் காணாமல் போதல் மற்றும் முறைகேடான பயன்பாட்டினை தவிர்ப்பதற்கு போலவே அவற்றை உச்சமட்ட செயற்திறனுடன் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக நிறுவன தலைவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக ரூபா 3,038,690 தொகை கிரயத்துடனான NISSAN SYLPHY வகை மோட்டார் வாகனம் ஜனாதிபதிச் செயலாளரின் இலக்கம் PS/IAD/TR/E(1)/V eh.Req-Oth.ins மற்றும் 2022 திசெம்பர் 03 திகதிய கடிதத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் படி 2022 திசெம்பர் 05 திகதி ஜனாதிபதிச் செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த மோட்டார் வாகனம் நிறுவனங்களிடையே முறைப் பிரகாரம் சொத்துக்கள் பரிமாற்றம் ஒன்று என இனங் கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | இந்த வாகனம் தற்காலிக பரிமாற்றமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. சொத்துக்கள் உரித்தாக்கல் மேற்கொண்டிருக்கவில்லை. தேவையின் நிமித்தம் எதிர் காலத்தில் அந்தச் சொத்துக்களை திருப்பிப் பெறுவதற்கு அல்லது உரித்தாக்குவதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | 2022 ஏப்ரல் 26 திகதிய 03/2022 இலக்கம் கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | 7,919,375 | கட்டிடங்கள் நிர்மாணித்தல், வாடகைக்கு எடுத்தல் மற்றும் அனைத்து செலவுகளையும் குறைப்பதற்காக அரச நிறுவனங்கள் கண்டிப்பாக செயற்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், வாடகைக்கு பெற்றிருந்த கட்டிடத்தை நவீன மயப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது பணம் செலவிடப்பட்டிருந்தது. | இந்தத் திணைக்களம், கொழும்பு கோட்டை யோக் வீதியில் அமைந்துள்ள ஹேமாஸ் கட்டிடத்தில் முதலாம் மாடியில் மிகவும் வரையறுக்கப்பட்ட இட வசதியுடன் நடாத்தப்பட்டு வருவதுடன், இங்கு சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக நாளாந்தம் பாரிய சேவைப் பெறுனர் தொகையொன்று வருகின்றார்கள். போதிய இடவசதியின்மையால் இதே கட்டிடத்தின் கீழ் மாடியின் ஒரு பகுதியை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தூரநோக்கும் சேவைகளும்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 1969 ஜனவரி 16 திகதிய 01 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தினால் நிறுவப்பட்ட திணைக்களத்தின் குறிக்கோள், தூர நோக்கு மற்றும் சேவைகளின் படி இலங்கை பொருளாதாரத்திற்கு பிரதிகூலமாக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இறக்குமதிகள் ஏற்றுமதிகளை கட்டுப்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், ஒவ்வொரு விடயம் தொடர்பாக அரச நிறுவனங்களினால் வெளியிடப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் மாத்திரம் இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. மேலும், திணைக்களத்தை நிறுவியதன் அடிப்படைக் குறிக்கோள்களை நிறைவேற்றக்கூடிய முறையில் செயற்படுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான நடைமுறை ஒன்று அல்லது நடவடிக்கை | இந்தத் திணைக்களம் 1969 இன் 01 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு இணங்க அரசினால் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு இணங்க வெளியிடப்படும் பிரமாணங்களின் படி திணைக்களத்தின் குறிக்கோள்கள், தூர நோக்கு மற்றும் சேவைகளின் படி செயற்படுத்தப்படுகின்றது. | 1969 ஜனவரி 16 திகதிய 01 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் திணைக்களம் நிறுவிய குறிக்கோள்கள், தூர நோக்கு மற்றும் சேவைகளின் படி பிரதிகூலமான இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளை கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| முறையொன்று தயாரித்திருக்காததுடன், அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்தல் முக்கிய கருமம் என கவனம் செலுத்தி நாட்டின் ஒட்டுமொத்த நுகர்வுகளின் எதிர்வுகூரல் மேற்கொண்டு தரக் கட்டுப்பாடு (Quality Control) மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | | |

**3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்கத்தினால் மென்பொருள் அபிவிருத்திக்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்துடன் மென்பொருள்களை முறைமையை தொடர்புபடுத்தல், வலைப்பின்னல் வலையமைப்பில் உட்புகுதல் வலையமைப்பின் மூலம் விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்காக ICTA நிறுவனத்துடன் 2017 பெப்ரவரி 03 திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டம் எதிர்பார்த்தவாறு மீளாய்வாண்டின் போதும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அனுமதிப்பத்திரங்கள் வழங்கல் மற்றும் இறக்குமதியின் பின்னர் அனுமதிப்பத்திரங்களுக்கு இணங்க இறக்குமதி மேற்கொள்ளப்பட்டதென தீர்த்தல் நடவடிக்கைகள் (வரவு வைத்தல்) ஆக 2012 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை 10 வருடங்களுக்குள் பல நிறுவனங்களில் இருந்து புதிய கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் கொள்வனவு | திணைக்களம் தற்போது பயன்படுத்தும் கணினி முறைமை 2014 ஆண்டில் நிறுவப்பட்ட ஒன்றாகும். அந்த முறைமையை நிறுவிய சந்தர்ப்பத்தில் நிகழ்வு நிலை நடைமுறையொன்றுக்கான வசதிகள் உட்படுத்தப்பட்டிருக்காமையால் நிகழ்வு நிலை வசதிகள் அடங்கக்கூடியவாறு திணைக்களத்தின் கணினி முறைமையினை அபிவிருத்தி செய்வதற்காக 2016 ஆண்டின் போது நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அந்த கருமங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகராண்மை நிறுவனம் (ICTA) அவர்களின் செலவில் இந்த திணைக்களத்திற்கு தேவையான கணினி முறைமையினை அபிவிருத்தி செய்வதற்கான கருமம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவ்வாறாயினும், ICTA நிறுவனத்தினால் கணினி முறைமையை அபிவிருத்தி செய்யும் அலுவல்கள் சரியாக பூர்த்தி செய்யப்படாமையால் அந்த விடயம் கைவிடப்படுவதற்கு நேரிட்டருந்தது. | திட்டமிடப்பட்டவாறு குறிப்பிட்ட தினத்தில் கருமங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு சுறுசுறுப்புடன் செயற்பட்டு செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

செய்வதற்காக ரூபா 6,596,994 தொகையும் முறைமையின் மென்பொருள் மற்றும் திருத்த வேலைகளுக்காக ரூபா 3,089,456 தொகையுமாக மொத்தம் ரூபா 9,686,450 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டம் இதுவரை எதிர்பார்த்த மட்டத்தில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) (i) சீசெல்ஸ் இலிருந்து தாய்லாந்து வரை பயணம் செய்த மீன்கள் களஞ்சியப்படுத்தப்பட்ட கொள்கலன்கள் அடங்கிய கப்பலொன்று கொழும்பு துறைமுகத்திற்கு அண்மித்த கடற் பகுதியில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக மின்சாரம் வழங்கல் தடைப்பட்ட காரணத்தினால் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு 2022 ஜனவரி 13 திகதி நெருங்கியிருந்ததுடன், வெளி நாட்டுக் கப்பலின் உள்நாட்டு முகவரின் மூலம் கண்டறியப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிற்கு சேதனப் பசளை உற்பத்திக்காக இந்த மீன் கொள்கலன்கள் 2022 மார்ச் 09 திகதி விற்பனை செய்யப்பட்டிருந்தது. 1969 இன் 1 இலக்க இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 08 ஆம் பிரிவின் படி நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு முன்னர் இறக்குமதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், தொழில்நுட்ப கோளாறு காரணமாக மாத்திரம் இலங்கை துறைமுகத்திற்கு நெருங்கிய பண்டங்களுக்காக பின்னர் அதாவது 2022 மே 30 திகதி அனுமதிப்பத்திரமொன்று வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. | 1969 இன் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 08 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு முன்னர் இறக்குமதி அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு பெற்றுக்கொள்ளாமல் இறக்குமதி செய்த பண்டங்களுக்காக அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளாமல் இறக்குமதி செய்வதற்குரிய மேலதிக கட்டணம் ஒன்று அறவீடு செய்து அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்குவதில் தடைஏதும் காணப்படவில்லை. | அனுமதிப்பத்திரம் வழங்கும் போது 1969 இன் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மேலும், அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்வதற்காக இறக்குமதியாளரினால் விண்ணப்பித்தல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக இலங்கைச் சுங்கத்தின் மத்திய முறைகேடு பிரிவின் பிரதீட்டு பணிப்பாளரினால் 2022 மே 25 திகதி அனுமதிப்பத்திரமொன்று வழங்கும் படி மேற்கொண்டிருந்த கோரிக்கை மற்றும் சேதனப் பசளை உற்பத்தி செய்யும் உள்நாட்டுக் கம்பனியினால் 2021 திசெம்பர் 10 திகதிய முற்திகதியிடப்பட்ட போலி வாணிப இன்வொயிஸ் ஒன்று சமர்ப்பித்திருந்த போதிலும், அது இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | Eco N Rich Organic Fertilizer நிறுவனம் அதாவது இறக்குமதியாளரினால் அனுமதிப்பத்திரமொன்று பெறுவதற்காக 2022.05.26 திகதி திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தியுள்ள விண்ணப்பப்பத்திரத்தின் மூலம் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, இலங்கைச் சுங்கத்தின் மத்திய முறைகேடு பிரிவின் பிரதி சுங்க பணிப்பாளரினால் 2022.05.25 திகதி மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தை மாத்திரம் கவனத்தில் எடுத்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என குறிப்பிட முடியும். அதேபோல், இறக்குமதியாளர்களுக்கு சுங்க தீர்த்தல் நடவடிக்கையின் போது உரிய ஆவணங்களின் மூலப் பிரதி சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. அதனால் அந்த மூலப் பிரதியுடன் துணைப் பிரதிகளை பரிசோதனை செய்த பின்னர் இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு தேவையான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளல் பொதுவான நடைமுறையாகும். | அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் போது 1969 இன் 01 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (iii) | தரத்தில் உயர்ந்த பண்டங்களை இறக்குமதி செய்தல் தொடர்பாக கவனம் செலுத்துதல் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் பணிப் பொறுப்பொன்றாக காணப்பட்ட போதிலும் துறைமுகத்திற்கு நெருங்கும் சந்தர்ப்பம் அளவில் இந்த மீன் இருப்பு பழுதடைந்திருந்து மிகவும் துர்நாற்றத்துடன் மற்றும் சுற்றாடலுக்கு சேதம் விளைவிக்கும் நிலமையில் | தரத்தில் உயர்ந்த பண்டங்களை இறக்குமதி செய்தல் தொடர்பாக கவனம் செலுத்துதல் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் பணிப் பொறுப்பொன்றாக காணப்பட்ட போதிலும், அந்தப் பண்டங்களின் தரமான நிலை தொடர்பாக ஒழுங்குறுத்தல் கருமம் மேற்கொள்ளப்படுவது அந்தப் பண்டங்களுடன் தொடர்புடைய அரச | தரத்தில் உயர்ந்த பண்டங்களை இறக்குமதி செய்தல் தொடர்பாக கவனம் செலுத்துதல் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்ட போதிலும் திணைக்களம் அனுமதிப்பத்தரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. | நிறுவனம் ஆகும். அதாவது, பண்டங்களை விடுவிப்பதற்கு இந்தத் திணைக்களத்திற்கு பரிந்துரை வழங்கும் நிறுவனம் ஆகும். திணைக்களத்திற்கு சொந்தமான கருமம் ஒன்றல்ல. எவ்வாறாயினும், பல நிபந்தனைகளின் கீழ் Eco N Rich Organic Fertilizer நிறுவனத்திற்கு மீன்களின் அகற்றப்பட்ட பகுதிகள் இறக்குமதி செய்வதற்காக அனுமதிப்பத்திரமொன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. மேலும், இலங்கை சுங்கத்தினால் இது தொடர்பாக நியமனம் செய்யப்பட்ட குழுவின் மூலம் இந்த விடயம் 0511.91.10 இன் கீழ் அனுமதிப்பத்திர கட்டுப்பாட்டின் கீழுள்ள விடயமொன்றென இணங்குகின்ற பின்னர் அந்தக் குழுவின் தீர்மானத்தின் படி இந்த அப்புறப்படுத்தப்பட்ட மீன் பகுதிகள் மனித நுகர்வுக்கு அன்றி திரவ சேதனப் பசளை உற்பத்திக்காக வழங்குவதற்கு அனுமதிப்பத்திரமொன்று வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நாட்டின் பொருளாதார நிலமையை கவனத்தில் எடுத்து பண்ட இறக்குமதியை கட்டுப்படுத்தல் தொடர்பான தமது பணிப் பொறுப்பு நிறைவேற்றப்பட வேண்டும் என திணைக்கள பணிகள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடி ஒன்று நாட்டில் நிலவிய சந்தர்ப்பத்தில் மற்றும் எதனோல் இறக்குமதி செய்தல் வரையறுக்கப்பட்டிருந்த போது 1,960,000 டொலர்கள் பெறுமதிக்காக இலங்கை சீனிக் கம்பனிக்கு எதனோல் உற்பத்திக்கு தேவையான | நாட்டிற்கு தேவையான எதனோல் நாட்டிலே உற்பத்தி செய்யும் குறிக்கோளுடன் மதுவரித் திணைக்களத்தின் பரிந்துரையின் படி 2020.01.01 திகதி முதல் எதனோல் இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. அதனிடையே உள்நாட்டு எதனோல் உற்பத்திக்காக சீனி உற்பத்தியின் போது துணை உற்பத்தியொன்றாக கிடைக்கும் மொலாஸஸ் ஐ | தமது பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றும் போது திணைக்களத்தின் பணிகள் கூற்றிற்கு நேரொத்ததாக இருக்க வேண்டும். |

| | |
|---|---|
| மொலேஸஸ் இறக்குமதி செய்வதற்கான இறக்குமதி அனுமதிப்பத்திரமொன்று 2022 ஜனவரி 21 திகதி வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. | பயன்படுத்தி எதனோல் உற்பத்தி செய்தல் பெல்வத்த மற்றும் செவனகல சீனித் தொழிற்சாலைகளினால் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், 2021 ஆண்டிற்கான இலக்காகிய எதனோல் 12.5 மில்லியன் லீற்றர்கள் உற்பத்தி செய்வதற்காக தேவையான மொலேஸஸ் தட்டுப்பாடு ஒன்று காணப்பட்டமையால் அந்த தட்டுப்பாட்டை தவிர்ந்துகொள்வதற்காக இலங்கை சீனிக் கம்பனியினால் மொலேஸஸ் இறக்குமதி செய்வதற்கு அனுமதி கோரியிருந்தது. அதற்காக மதுவரித் திணைக்களத்தின் 2022.01.19 திகதிய Molasses Import கொண்ட கடிதத்தின் மூலம் பரிந்துரை வழங்கப்பட்டிருந்ததுடன், 2021.05.05 திகதிய இலக்கம் PS/EDC/MA2/01(ii) கொண்ட கடிதத்தின் மூலம் ஜனாதிபதிச் செயலாளரினால் மேற்குறிப்பிட்ட இறக்குமதிக்காக அனுமதிப்பத்திரமொன்று வழங்கும் படி ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. |

## 4. நல்லாளுகை

### 4.1 அரச கணக்குகள் குழுவின் கட்டளைகளை செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆக்கபூர்வமான தகவல் தொழில்நுட்ப முறைமையொன்றை பயன்படுத்தி அரச வருமானம் சேகரித்தல், முன்னேற்றுவதற்காக தரப்பினர்களினால் மற்றும் தரப்பினர்களுடன் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கான 2016 நவம்பர் மாதம் 23 திகதிய பாராளுமன்றத்திற்கு | 2016 நவம்பர் 23 திகதி நடைபெற்ற அரச கணக்குகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் வெளியிடப்பட்டது அப்போதைக்கு திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சித் திட்டத்தின் படியான நிலைமையாகும். இந்த நிகழ்ச்சித் திட்டம் தயாரித்தல் 2017 ஆண்டில் ICTA நிறுவனத்தினால் அவர்களின் | அரச கணக்குக் குழுவின் கட்டளைகளுக்கு இணங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரச கணக்குகள் தொடர்பான குழுவின் இடைக்கால அறிக்கையின் கட்டளையின் படி இருபத்தெட்டு நிறுவனங்களுடன் தொடர்புகள் மேற்கொண்டு அனுமதிப்பத்திரம் வழங்கும் போது குறிப்பிட்ட நிறுவனத்தில் இருந்து இணையம் ஊடாக பரிந்துரைக் கடிதங்கள் மேற்கொள்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என அறிவித்து'' இருந்த போதிலும் அந்தப் பரிந்துரை கணக்காய்வுத் திகதியாகிய 2023 மார்ச் 23 திகதி அளவிலும் செயற்படுத்தியிருக்கவில்லை. | செலவின் கீழ் நிறைவேற்றிக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தது. அவ்வாறாயினும் அந்த நிறுவனத்தினால் கணினி முறைமை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை சரியாக பூர்த்தி செய்யப்படாத காரணத்தினால் அந்த அலுவல்களை கைவிடுவதற்கு நேரிட்டிருந்தது. அதன் காரணமாக திணைக்களத்தினால் நிகழ்வு நிலை கணினி முறைமையொன்று அபிவிருத்தி செய்யும் அலுவல்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன்படி, ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் கீழ் செயற்படும் EXBS நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிகழ்வு நிலை கணினி முறைமையொன்று மானியமாக வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதுடன், அந்த நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கும் அலுவல்கள் 2023 ஏப்ரல் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த கணினி முறைமையை தயாரிக்கும் அலுவல்கள் 2024 பெப்ரவரி மாதம் அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்துடன், அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பரிந்துரை வழங்கப்பட்ட நிறுவனம் நிகழ்வு நிலையில் தொடர்புபடுத்துவதற்காக அலுவல்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. | |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 111 தொகையாக காணப்பட்ட போதிலும் உள்ளவாறான பதவியணி எண்ணிக்கை 92 தொகையாக காணப்பட்டதுடன், அத்திகதியில் உள்ளவாறு பிரதி/ உதவி கட்டுப்பாட்டாளர், சட்ட | பதவிகள் அனேகமாவை நாடளாவிய சேவைகளுக்கு மற்றும் இணைந்த சேவைகளுக்கு உரியவையாக இருந்ததுடன், குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொது நிருவாக உள்நாட்டு விவகார மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தற்போது குறிப்பிட்ட | அத்தியவசியமான பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |

உத்தியோகத்தர் மற்றும் உதவிப் பணிப்பாளர் - தகவல் தொழில்நுட்பம் ஆகிய சிரேஷ்ட மட்டத்தில் 03 பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும், மூன்றாம் மட்டத்தில் 02 உத்தியோகத்தர்களும், இரண்டாம் மட்டத்தில் 12 உத்தியோகத்தர்களும் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 02 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டது. வெற்றிடங்களுக்கு நிரப்பப்பட்டு வருகின்றது.

மேலும், சட்ட உத்தியோகத்தர் திணைக்களம் சார் பதவியொன்றாக இருப்பதனால் தற்போது ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு வருகின்றது.